RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 180 | ஜூலை.5 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## அதிமுக உட்கட்சி விவகாரத்தில் விசாரணை விரைவாக நடத்தப்படும்: ஐகோர்ட்டில் தேர்தல் ஆணையம் தகவல்



சென்னை: ஜூலை.5-

அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான விசாரணை விரைவாக நடத்தப்படும், காலக்கெடு நிர்ணயிக்க வேண்டாம் என தேர்தல் ஆணையம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அதிமுக பொதுச் செயலாளராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டது உள்ளிட்ட பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தேர்தல் ஆணையம் ஏற்கக்கூடாது என்றும், அதிமுக உள்கட்சி விவகாரம் முடிவுக்கு வரும்வரை கட்சிக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது என்றும் கோரி, தேர்தல் ஆணையத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், திண்டுக்கல் சூரியமூர்த்தி, வா.புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன், ராமச்சந்திரன், சுரேன் பழனிசாமி உள்ளிட்டோர் மனு அளித்துள்ளனர். அந்த மனு மீதான விசாரணை நடந்து வருகிறது.

இந்நிலையில், அதிமுகவுக்கு எதிரான இந்த மனுக்களை தேர்தல் ஆணையம் விசாரிக்க எதிர்ப்பு தெரிவித்து அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனுவை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம், தேர்தல் சின்னங்கள் ஒதுக்கீட்டு விதிகளின்படி, அதிமுகவின் உள்கட்சி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு அதிகார வரம்பு உள்ளதா என்பதை ஆரம்பக்கட்ட விசாரணை நடத்தி முடிவுக்கு வரவேண்டும் என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

உயர் நீதிமன்றம் இது தொடர்பாக உத்தரவு பிறப்பித்து 7 வாரங்கள் கடந்த நிலையில், தேர்தல் ஆணையம் தனக்குரிய அதிகார வரம்பு குறித்து இன்னும் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை என்றும், தேர்தல் ஆணையத்தின் ஆரம்பக்கட்ட விசாரணைக்கு காலவரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும் எனக் கோரியும் அதிமுக பொதுச் செயலாளரான பழனிசாமி தரப்பில் புதிதாக மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், '2026ம் ஆண்டுக்கான சட்டப்பேரவைத் தேர்தலுக்கு அதிமுக தயாராக வேண்டிய சூழலில், அதிமுக மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் அளிக்கப்பட்ட மனுக்கள் தொடர்பாக விசாரிக்கும் அதிகார வரம்பு குறித்து தேர்தல் ஆணையம் ஆரம்பக்கட்ட விசாரணையை முடிவுக்கு கொண்டு வராமல் இழுத்தடிப்பது சட்டவிரோதமானது. தேர்தல் ஆணையத்தின் இந்தப் போக்கு அதிமுக குறித்த தேவையற்ற தகவல்களைப் பரப்ப வழிவகுத்துவிடும்.

தேர்தல் நெருங்கும் நேரத்தில் கட்சிக்கு எதிராக செயல்படுபவர்கள் தேர்தல் ஆணையத்தின் இத்தகையப் போக்கை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள வாய்ப்புள்ளது. எனவே அதிகார வரம்பு தொடர்பான ஆரம்பக்கட்ட விசாரணையை தேர்தல் ஆணையம் இனியும் தாமதிக்காமல், துரிதமாக நடத்தி முடிக்கும் வகையில் காலவரம்பை உயர் நீதிமன்றம் நிர்ணயம் செய்ய வேண்டும்' எனக் கோரியிருந்தார். கடந்த முறை இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, எப்போது உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பது குறித்து கேட்டு தெரிவிக்குமாறு தேர்தல் ஆணைய தரப்பு வழக்கறிஞருக்கு உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுப்ரமணியன், கே.சுரேந்தர் அமர்வில் நேற்று (ஜூலை 4) மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நிரஞ்சன், கூடுதல் கால அவகாசம் வேண்டும் என்றும், எவ்வளவு விரைவாக விசாரணை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக நடத்தவோம். காலக்கெடு எதுவும் நிர்ணயிக்க வேண்டாம் என தெரிவித்தார்.

அப்போது ஓபிஎஸ் மற்றும் பெங்களூர் புகழேந்தி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், தங்கள் தரப்புக்கு மனுவின் நகல்கள் வழங்கப்படவில்லை என தெரிவித்தனர். இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், ஓபிஎஸ் மற்றும் புகழேந்தி தரப்புக்கு, நகல்களை வழங்க உத்தரவிட்டு விசாரணையை வரும் 10ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு நிபந்தனை விதிப்பது சர்வாதிகாரத்தின் உச்சம்: இந்து முன்னணி குற்றச்சாட்டு



சென்னை: ஜூலை.5-

விநாயகர் சதுர்த்தி விழாவுக்கு நிபந்தனை விதிப்பது சர்வாதிகாரத்தின் உச்சம் என இந்து முன்னணி மாநில தலைவர் காடேஸ்வரா சி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: காவல் துறை அதிகாரி டேவிட்சன் தேவாசிர்வாதம் ஜூலை 2ம் தேதி அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் காவல் துறையினருக்கு சுய ஒழுக்கம் அவசியம் என்ற தலைப்பில் அறிவுறுத்தல்கள், ஆலோசனைகளை தெரிவித்திருந்தார். ஆனால் அந்த ஆலோசனையிலேயே அடுத்த மாதம் வருகின்ற விநாயகர் சதுர்த்தி விழாவின் போது புதிய இடங்களில் விநாயகர் சிலைகள் எதுவும் வைக்கக் கூடாது என்றும் கூறியுள்ளதாக தகவல் தெரிகிறது.

தமிழகத்தில் புதிய புதிய ஜெபக்கூடங்கள், புதிய மசூதிகள் ஏற்படுத்துவதை தடை செய்வதில்லை. ஆனால் புதியதாக விநாயகர் சதுர்த்தி விழாவுக்காக சில நாட்கள் மட்டும் விழா நடத்துவது இந்த அரசுக்கு எரிச்சலை ஏற்படுத்துவது ஏன்? திமுகவின் கூட்டணி கட்சிகள் மத்திய அரசுக்கு எதிராக, இந்துக்களுக்கு எதிராக தினம் தினம் ஏதாவது ஒரு ஆர்ப்பாட்டம், போராட்டம் என மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு எவ்வித நிபந்தனையுமின்றி அனுமதி அளிக்கிறது திராவிட மாடல் திமுக அரசு. ஆனால் இந்துக்களுக்கு ஆதரவாக, குரல் கொடுக்கக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. சம்பந்தமே இல்லாத பல நிபந்தனைகள் இந்துக்களுக்கு விதிக்கப்படுகிறது. சாதாரண ஆர்ப்பாட்டம் முதல் முருக பக்தர்கள் மாநாடு வரை இந்துக்கள் நீதிமன்றத்தை நாடியே அனுமதி பெற வேண்டி உள்ளது. அந்த அளவு திமுக அரசு இந்துக்களுக்கு விரோதமாகச் செயல்படுகிறது.

பக்தர்களிடையே எந்த வேறுபாடுகளும் இல்லாமல் தமிழக இந்துக்களை ஒருங்கிணைப்பது விநாயகர் சதுர்த்தி திருவிழா ஆகும். இதற்கு இப்போதே நிபந்தனைகள் விதிப்பது சர்வாதிகாரத்தின் உச்சமாகும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 'பரந்தூர் மக்களுடன் நானே உங்களை நேரில் சந்திக்கும் சூழல் உருவாகும்'

## முதல்வருக்கு விஜய் கடிதம்





சென்னை: ஜூலை.5-

"நானே பரந்தூர் பகுதி மக்களை அழைத்துக் கொண்டு வந்து, தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் தங்களை நேரில் சந்தித்து, அவர்கள் சார்பாக முறையிடும் சூழல் உருவாகும்," என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தவெக தலைவர் விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், "பரந்தூர் பகுதியில், விவசாய நிலங்களை அழித்துவிட்டுப் புதிய விமான நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பொதுமக்களும் விவசாயிகளும் ஏகனாபுரம் கிராமத்தில் வருடக்கணக்காகப் போராடி வருகின்றனர். போராடும் மக்களை தவெக சார்பாக நான் சந்தித்த மறுநாளே, பரந்தூர் பகுதி 'மக்கள் பாதிக்காத வண்ணம்' விமான நிலையம் அமைக்கப்படும் என்று தமிழக அரசு சார்பாக ஒரு விளக்க அறிக்கை வெளியிடப்பட்டது.

ஆனால். 'மக்கள் பாதிக்காத வண்ணம்' என்றால், பரந்தூர் பகுதியில் விமான நிலையம் வரவே வராது என்றோ அல்லது யாருக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் வேறு இடத்தில் அமைக்கப்படும் என்றோ எத்தகைய சரியான விளக்கமும் அளிக்கப்படவே இல்லை. மாறாக, பரந்தூரில் 1005 குடும்பங்கள் மட்டுமே வசிப்பதால் அங்கு விமான நிலையம் அமைந்தால் பெரிய பாதிப்பு இருக்காது என்ற அர்த்தம் தொனிக்கும் ஒரு காரணமும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருந்தது.

1005 குடும்பங்கள் மட்டுமின்றி, இப்புதிய விமான நிலையத் திட்டத்தால் பாதிப்புக்கு ஆளாகும் ஏறத்தாழ 15 ஆயிரம் பேரும் நமது மக்கள் தானே என்கிற அக்கறையும் மனிதாபிமானமும் அற்றதாகவே அந்த அறிக்கை இருந்தது. மேலும், பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கும் முடிவுக்கும் தமிழக அரசுக்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்பது போன்ற ஒரு தோற்றத்தைத் தமிழக அரசு ஏற்படுத்தி வந்த நிலையில், பரந்தூர் பகுதியைத் தெரிவு செய்து பரிந்துரைத்ததே தமிழக அரசுதான் என்று மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர், சென்னை விமான நிலையத்தில் 27.02.2025 அன்று அளித்த பேட்டியில் வெளிப்படையாக அறிவித்தார்.

இது மக்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. விவசாயப் பெருங்குடி மக்களின் வீடுகளை, விவசாய நிலங்களை, வாழ்வாதாரங்களை மற்றும் அப்பகுதிகளில் இருக்கும் இயற்கை நீர்நிலைகளை அழித்து, அதன் மூலம் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பையும் விளைவித்து, அங்குப் புதிய விமான நிலையம் அமைத்தே ஆக வேண்டும் என்ற நிர்பந்தம் யாரால், எதற்காக?

மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்ட முதல்வராக, போராட்டக் களத்தில் இருக்கும் மக்களின் பிரதிநிதிகளைத் தாங்கள் இதுவரை நேரில் சந்திக்காதது ஏன்? இது போன்ற கேள்விகளுக்கு இதுவரை விடையில்லை.

இந்நிலையில், தமிழக அரசின் 202526 நிதிநிலை அறிக்கையிலும், பரந்தூர் விமான நிலையம் அமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்படும் என்ற அறிவிப்பே இருந்தது. இது பரந்தூர் பகுதி மக்களுக்கு எதிரான அறிவிப்பே ஆகும். இந்த அறிவிப்பு நிதி அமைச்சரின் தனிப்பட்ட முடிவால் வந்த அறிவிப்பா அல்லது தங்கள் அனுமதிக்குப் பிறகான அறிவிப்பா என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்க்க இயலவில்லை.

பட்ஜெட்டுக்கு முன்பே, தங்களை நேரில் சந்திக்க வேண்டும் என விமான நிலைய எதிர்ப்புப் போராட்டக் குழுவினர், கண்ணீர் மல்க, 03.03.2025 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிக்கையை வெளியிட்டிருந்தனர். அது தங்களின் பார்வைக்கு வந்ததா என்பது தெரியவில்லை. ஒருவேளை தங்கள் பார்வைக்கு வந்தும், அது குறித்த எந்த ஒரு கனிவான அணுகுமுறையும் தங்களிடம் இருந்து வெளிப்படவில்லையா?.

இப்படியான சூழலில், பரந்தூர் விமான நிலையத் திட்ட அனுமதிக்கான கொள்கை அளவிலான ஒப்புதலை மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சகம் வழங்கி உள்ளது. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளும் கூட்டு நிறுவனத்தைத் தேர்வு செய்யும் பணியைத் தமிழக அரசின் தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO) விரைவில் செய்யப் போகிறது எனவும் செய்தி வெளியாகியுள்ளது. தமிழக அரசு சார்பான முடிவுகளும் அறிவிப்புகளும் உங்களுக்குத் தெரிந்துதான் எடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் இப்போது இன்னும் வலுவடைவதைத் தவிர்க்க இயலவில்லை. ஒருவேளை. உங்களுக்குத் தெரிந்துதான் நடக்கிறது எனில், உங்களின் மக்கள் நலன் சார்ந்த சிந்தனை குறித்துக் கேள்வியும் இயல்பாகவே எழுகிறது.

விமான நிலையம் என்ற பெயரில் மட்டுமே 20 கிராமங்களுக்கு உட்பட்ட நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. பின், அதைச் சுற்றித் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் எனக் கட்டிடங்கள் கட்டப்படும். அதற்காக, அந்தப் பகுதியைச் சுற்றி உள்ள மேலும் 20 கிராமங்கள் அழிக்கப்படும் என்ற அச்சம் அந்த மக்களிடம் இருக்கிறதே, அதற்கு உங்கள் பதில் என்ன? இது, பரந்தூர் பகுதி மக்கள் மீது ஏவப்பட்டுள்ள நிர்வாக ரீதியான அரச பயங்கரவாதம் அல்லாமல் வேறென்ன?

விவசாயிகளின் உயிர்நாடியான, காலம் காலமாக அவர்களின் அடையாளமாக இருக்கும் பூர்வீக நிலங்களைப் பறித்து அழித்துவிட்டு, அதற்குப் பதிலாக மாற்று இடத்தை அரசு தருவதாகச் சொல்லப்படுகிறது. ஒருவேளை, அப்படித் தருவதாகச் சொல்லும் மாற்று இடமோ, விவசாயம் உட்பட எவ்வித வாழ்வாதாரத்துக்கும் உதவாத வெற்று இடமாக இருந்தால் நம் விவசாயிகளின் நிலை என்னாவது?

சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த மதிப்பீட்டு ஆய்வுகள் இன்னும் முடியாத நிலையில், அவசர அவசரமாக நிலங்களைக் கையகப்படுத்த வேண்டிய அவசியமென்ன? ஏதேனும் ஒரு துறையில் தடையில்லாச் சான்றிதழ் வழங்க மறுத்தாலும் விமான நிலையம் அமைவது சந்தேகம் எனும்போது, எந்த நம்பிக்கையில் மாநில அரசு நிலங்களைக் கையகப்படுத்த அரசாணை வெளியிடுகிறது? கையகப்படுத்தப் போகும் நிலங்களில் 26.54 சதவீத நிலம் wetlands எனப்படும் நீர் தேங்கும் பகுதிகளாகும். இந்த நீர் வழித்தடங்கள் அழிக்கப்பட்டால், சென்னை மாநகரம் முழுவதும் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

கம்பன் கால்வாய், ஏகனாபுரம் ஓடை, நெல்வாய் ஏரி என ஏராளமான நீர்நிலைகள் உள்ள நிலப்பகுதி இது. இந்த நீர்நிலைகள் அழிக்கப்பட்டால், குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படலாம் என்பது அரசின் சிந்தனைக்கு ஏன் வரவில்லை? பரந்தூர் விமான நிலையப் பகுதிகளின் நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்காக அரசால் அமைக்கப்பட்ட மச்சேந்திரநாதன் ஐஏஎஸ் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் அறிக்கையைத் தமிழக அரசு பொதுவெளியில் வெளியிட மறுப்பது ஏன்? அது இத்திட்டத்தின் மீது மேலும் சந்தேகங்களை எழுப்புகிறது. இவை அனைத்தும் பரந்தூர் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் அண்மையில் என்னைச் சந்தித்த போது மன வேதனையுடன் பகிர்ந்ததைக் கொண்டு நான் எழுப்பும் வினாக்கள்.

இத்தகைய வேதனைகள் தொடரும்போது, தற்போது பரந்தூர் விமான நிலையப் பணிகளுக்காக விவசாய நிலங்களைக் கையகப்படுத்த. கடந்த ஜூன் 25ம் தேதி அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விமான நிலையம் அமைவதை ஏற்காமல் வருடக்கணக்காகப் போராடும் மக்களின் நிலங்களையும் சேர்த்தே கையகப்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது மிகவும் வேதனைக்கும் கண்டனத்துக்கும் உரியது. விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க வேண்டிய தமிழக அரசு, அவர்களின் கண்களில் குத்துவதாகவே இந்த அரசாணை உள்ளது.

இவ்வளவு தூரம் வந்துவிட்ட நிலையிலும், இப்போதும் ஒன்றும் குறைந்துவிடவில்லை. தங்களுக்கு உண்மையாகவே மக்கள் நலன் சார்ந்த அக்கறை இருக்கிறது எனில், பரந்தூர் பகுதி மக்களின் கோரிக்கைகளை ஏற்று, அவர்களைக் கண்துடைப்புக்காக அதிகாரிகளையோ அல்லது அமைச்சர்களையோ வைத்துச் சந்திக்கச் செய்யாமல். தாங்களே நேரில் சந்தித்து, பரந்தூரில் விமான நிலையம் அமைக்கப்படாது என்கிற உத்தரவாதத்தை அவர்களுக்கு உடனடியாக அளிக்கலாம்.

ஆனால், அதற்கு மாறாக, எதிர்க்கட்சியாக இருந்த போது ஒரு நிலைப்பாடு, ஆளும் கட்சியாக ஒரு நிலைப்பாடு என்று எதுவுமே செய்யாமல் பரந்தூர் பகுதி மக்களின் கோரிக்கைகள் தொடர்ந்து நிராகரிக்கப்படும் பட்சத்தில், எம் மக்களுக்காகக் களத்தில் நிற்க வேண்டியது தவெகவின் கடமை என்பதால், நானே பரந்தூர் பகுதி மக்களை அழைத்துக்கொண்டு வந்து, தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் தங்களை நேரில் சந்தித்து, அவர்கள் சார்பாக முறையிடும் சூழல் உருவாகும்.

அது மட்டுமல்லாமல் பரந்தூர் பகுதி மக்களின் நலனுக்காக மிகப் பெரிய மக்கள் போராட்டத்தையும் சட்டப் போராட்டத்தையும் முன்னெடுக்க வேண்டிய சூழலும் எழும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று விஜய் அந்தக் கடிதத்தில் கூறியுள்ளார்.

## லாக்அப் உயிரிழப்பு, வரதட்சணை கொடுமைக்கு முற்றுப்புள்ளி: குஷ்பு வலியுறுத்தல்



சென்னை: ஜூலை.5-

லாக்அப் உயிரிழப்புகள், வரதட்சணை கொடுமை ஆகியவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் குஷ்பு கூறினார்.

சென்னை விமான நிலையத்தில், செய்தியாளர்களிடம் நேற்று அவர் கூறியதாவது: லாக்அப் உயிரிழப்புகள் தமிழகத்தில் அதிகரித்து கொண்டே இருக்கிறது. சட்டம்ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. பொதுமக்களுக்கு போலீஸார் தரும் தொந்தரவுகள் குறித்து, முதல்வர் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், வரதட்சணை கொடுமையால் தமிழகத்தில் பல பெண்கள் தற்கொலை செய்துகொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. வரதட்சணை வாங்குவது மட்டுமல்ல, கொடுப்பதும் தவறுதான். எனவே, லாக்அப் உயிரிழப்புகள், வரதட்சணை கொடுமை போன்றவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

சினிமா துறையில் மட்டும்தான் போதைப்பொருள் நடமாட்டம் இருப்பதாகக் கூறமுடியாது. பள்ளி, கல்லூரி உள்பட எல்லா இடத்திலும் போதைப்பொருள் நடமாட்டம் இருக்கிறது. திரைத் துறையில் 2 பேர் சம்பந்தப்பட்டு இருப்பதால், உடனே திரைத்துறையில் போதைப்பொருள் அதிகமாகி விட்டது என்பதா?

இதை தடுப்பதற்கான வழியைப் பார்க்காமல், பூதக்கண்ணாடி வைத்து, பெரிதாக்கக் கூடாது. ஊசி மூலம் போதை உட்கொள்ளும் நிலையும் இருக்கிறது. போதைக்கு அடிமையானவரை எப்படி மீட்பது? என்ற வழியைப் பார்க்க வேண்டும் என்றார்.

## மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் (DHEW) ஒப்பந்த அடிப்படையிலான தகவல் தொழில் நுட்ப உதவியாளர் (IT Assistant) பணியிடத்திற்கு

# வருகின்ற 18.07.2025 ஆம் தேதிக்குள் குறிப்பிட்டுள்ள முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைத்திடல் வேண்டும்

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.05-

சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய அரசின் திட்டங்கள் திறன்பட செயல்படுத்தப்படுவதையும், திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு பயன்பாட்டு சான்று அடிப்படையில் கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தவும், பயனாளிகள் மற்றும் திட்டப்பலன்கள் கண்காணிக்கவும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் மாவட்ட மகளிர் அதிகார மையம் (DHEW) கடந்த நவம்பர் 2023 முதல் சிவகங்கை மாவட்டத்தில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தற்பொழுது, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு (DHEW) ஒப்பந்த அடிப்படையில் தகவல் தொழில் நுட்ப உதவியாளர் (IT Assistant) பணியிடத்திற்கு பணி நியமனம் செய்யும் பொருட்டு, கீழ்க்கண்ட நிலையில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

தகவல் தொழில்நுட்ப உதவியாளர் : 1 (ஒன்று) (IT Assistant)

தொகுப்பூதியம் : ரூ. 20,000/

கல்வித் தகுதி : கணினி / ஐடி பாடப்பிரிவில் இளங்கலைப்பட்டம்

வயது வரம்பு : 35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

பணியிடம் : சிவகங்கை

முன் அனுபவம் : அரசு அல்லது அரசு சாரா/ தகவல் தொழில்நுட்பம் சார்ந்த மாநில அல்லது மாவட்ட அளவில் தரவு மேலாண்மை, செயல்முறை ஆவணங்கள் மற்றும்வலை அடிப்படையிலான அறிக்கையிடல் வடிவங்களில் குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

எனவே, ஆர்வமுள்ள தகுதியான நபர்கள் தங்களது சுயவிபரங்களை வருகின்ற 18.07.2025 அன்று மாலை 05.00 மணிக்குள் தரை தளம், மாவட்ட சமூக நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை என்ற முகவரிக்கு நேரிலோ, அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்பி வைத்திடல் வேண்டும். மேலும், விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாக தரை தளத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட சமூகநல அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.



## இராமநாதபுரத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் உள்ள

# வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மைய கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பங்கேற்று குத்துவிளக்கேற்றி வைத்தார்

இராமநாதபுரம், ஜூலை.05-

தமிழ்நாடு முதலமைச்சர் வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்ட கட்டடங்களை காணொளிக்காட்சியின் மூலம் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரத்தில் வேளாண்மை உழவர் நலத்துறையின் மூலம் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் ரூ.84 இலட்சம் மதிப்பீட்டில் வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையக் கட்டடம் கட்டப்பட்டு ள்ளதை விவசாயிகள் பயன்பாட்டிற்கும், அதேபோல் போகலூர் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் ரூ.59 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட கால்நடை மருந்தக கட்டடத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொளிக்காட்சியின் மூலம் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள்.

அதனைத்தொடர்ந்து இராமநாதபுரத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை வளாகத்தில் உள்ள வேளாண் சந்தை நுண்ணறிவு மற்றும் விவசாயிகள் ஆலோசனை மைய கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிம்ரன்ஜீத் சிங் காலோன், பங்கேற்று குத்துவிளக்கேற்றி வைத்து வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் 25 பயனாளிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கினார்.

மேலும் போகலூர் ஊராட்சியில் நடைபெற்ற கால்நடை மருந்தக கட்டட திறப்பு விழா நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மரு.ரவிச்சந்திரன் அவர்கள், பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் (பொ) திருமதி.கங்காதேவி அவர்கள் ஆகியோர் குத்துவிளக்கேற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்.





# ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையை தொடக்கி வைத்த எம்எல்ஏ

மானாமதுரை, ஜூலை.05-

திமுக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி திருப்புவனம் கிழக்கு ஒன்றியம் சொக்கையன்பட்டி கிராமத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையையில் முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் தலைமையில் ஈடுபட்டனர் .

இந்நிகழ்வில் திருப்புவனம் கிழக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஏ. கடம்பசாமி முன்னாள் ஒன்றிய குழு துணை தலைவர் அழ. மூர்த்தி மற்றும் பாக முகவர்கள் இணையதள பாக முகவர்கள் மகளிர் அணியினர் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

அதை போலவே மானாமதுரை சட்டமன்ற தொகுதி மானாமதுரை கிழக்கு ஒன்றியம் கொன்னக்குளம் கிராமத்தில் ஓரணியில் தமிழ்நாடு வீடு வீடாக சென்று புதிய வாக்காளர்களை ஓரணியில் உறுப்பினர்களாக சேர்த்தனர்.

இந்நிகழ்வில் மானாமதுரை கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் துரை ராஜாமணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் வினோத் ,பாலா , கண்ணன் கொன்னக்குளம் மலைச்சாமி , னசேகரன் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி செய்திக்குறிப்பு

சிவகங்கை, ஜூலை.05-

திட்டமில்லா பகுதிகளில் 01.01.2011ஆம் தேதிக்கு முன்னர் கட்டப்பட்டு இயங்கிவரும் அனுமதியற்ற கல்வி நிறுவனக் கட்டிடங்களுக்கு, வரன்முறைபடுத்தும் திட்டத்தின் கீழ் இணையதளம் மூலம் விண்ணப்பிக்க மீண்டும் ஒரு வாய்ப்பாக வருகின்ற 30.06.2026 வரை ஓராண்டு காலம் காலநீட்டிப்பு செய்து, ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களில் எவ்வித மாற்றமும் இல்லாமல் அரசாணை எண்.92, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ(3)) துறை, நாள்:26.06.2025ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், அவ்வாறாக கட்டப்பட்டுள்ள அனுமதியற்ற கல்வி நிறுவன கட்டடங்கள் மலையிடப் பகுதியில் (HACA) அமையும் பட்சத்தில், அரசு கடிதம் எண்.15535/ ந.வ.4(3)/2019, நாள்: 18.02.2020ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வழிமுறைகளை பின்பற்றுதல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் https://www.tcponline.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பதிவு செய்து, பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.



■ வேலூர் மாவட்டம், காட்பாடி க தாலுகா, கிளித்தான்பட்டரையில் உள்ள நியாய விலை கடையை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது காட்பாடி வட்டாட்சியர் க.ஜெகதீஸ்வரன், மாமன்ற உறுப்பினர் சித்ரா, சுகாதார ஆய்வாளர்கள் சஞ்சய் மற்றும் சிவகுமார், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் காட்பாடி வடக்கு திமுக 5வது வட்ட செயலாளர் விநாயகம், உட்பட பலர் உடனிருந்தார்.

# சிங்கம்புணரி வட்டம், குளத்துப்பட்டி கிராமத்திலுள்ள "பொது விழா மேடையில்" வருகின்ற 09.07.2025 அன்று மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறவுள்ளது

### மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, ஜூலை.05-

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், வாராப்பூர் உள்வட்டம், குளத்துப்பட்டி குரூப், குளத்துப்பட்டி கிராமத்திலுள்ள "பொது விழா மேடையில்" வருகின்ற 09.07.2025 (புதன்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறவுள்ளது.

மக்கள் தொடர்பு திட்ட முகாமில், அரசுத்துறை அலுவலர்களை ஒருங்கிணைத்து அரசின் திட்டங்களை துறை சார்ந்த முதன்மை அலுவலர்களைக் கொண்டு, பொதுமக்களுக்கு திட்டங்கள் குறித்து எடுத்துரைத்து, தகுதிவாய்ந்த பயனாளிகளை பயன்பெறச் செய்வதே இம்மக்கள் தொடர்பு திட்ட முகாமின் நோக்கமாகும்.

எனவே, மேற்கண்ட கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் அனைவரும் நடைபெறவுள்ள மக்கள் தொடர்பு திட்ட முகாமில் கலந்து கொண்டு, அரசின் திட்டங்களை பெறுவதற்கான வழிமுறைகளை அறிந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

present sale for
all over Tamil Nadu



# பழனியில் உலக நலன் வேண்டி நடத்த சித்தர் வழிபாடு ஜப்பானிலிருந்து வந்தவர்கள் பாரம்பரிய உடை அணிந்து கலந்து கொண்டனர்

பழனி, ஜூலை.05-

பழனி மலை அடிவாரத்தில் சித்தர் புலிப்பாணி ஜீவசமாதியில் உலக நலன் வேண்டி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. சித்தர் அகத்தியர், போகர் , புலிப்பாணி உள்ளிட்ட 18 சித்தர்கள் பூஜை நடைபெற்றது. சித்தர் போகர் மற்றும் புலிப்பாணி எழுதிய ஓலைச்சுவடிகள் வைக்கப்பட்டு சிறப்பு பூஜை செய்யப்பட்டன. தொடர்ந்து வேத மந்திரங்கள் முழங்க நூற்றுக்கும் மேற்பட்ட மூலிகைகள் பயன்படுத்தி வேத மந்திரம் முழங்க யாகம் நடைபெற்றது. பழனி ஆதீனம் சிவானந்த புலிப்பாணி சுவாமிகள், ஜப்பானிய தொழிலதிபர் கோபால் பிள்ளை சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற யாகத்தில் ஜப்பான் நாட்டில் இருந்து வந்திருந்த வெளிநாட்டினவர் தமிழர் பாரம்பரிய உடையான வேஷ்டி, சேலை அணிந்து கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பழனி ஆதினம் சிவனந்தபுலிப்பாணி சுவாமிகள், இளையபட்டம் செல்வநாதன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# "நடப்பு 2025-26ஆம் ஆண்டில் காரீப் பருவத்தில் நெல், மக்காச்சோளம், சோளம், நிலக்கடலை, எள், துவரை, பருத்தி, வாழை, வெங்காயம், தக்காளி, கத்தரி மற்றும் மரவள்ளி சாகுபடி செய்யும் விவசாயிகள் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்

தேனி, ஜூலை.05-

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளுக்கு இயற்கை பேரிடர்களால் எதிர்பாராமல் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதிநவீன தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவிக்கவும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 202526ஆம் ஆண்டில் தேனி மாவட்டத்தில் காரீப், சம்பா மற்றும் ராபி பருவங்களுக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தினை தேனி மாவட்டத்தில் காப்பீடு KSHEMA GIC நிறுவனம் செயல்படுத்துகிறது. இதன்படி நடப்பு ஆண்டில் (202526) தேனி மாவட்டத்தில் காரீப் பருவத்தில் நெல், மக்காச்சோளம், சோளம், நிலக்கடலை, எள், துவரை, பருத்தி, வாழை, வெங்காயம், தக்காளி, கத்தரி மற்றும் மரவள்ளி ஆகிய பயிர்களுக்கு 61 பிர்காக்கள், சம்பா பருவத்தில் நெற்பயிருக்கு 14 பிர்க்காக்கள் மற்றும் ராபி பருவ மக்காச்சோளம், வாழை, கத்தரி, முட்டைகோஸ், கொத்தமல்லி, தக்காளி ஆகிய பயிர்களுக்கு 27 பிர்க்காக்கள் அறிவிக்கை செய்யப்பட்டு அதன் கீழ் வரும் அனைத்து வருவாய் கிராமங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் கடன் பெறும் விவசாயிகள், அவர்கள் கடன் பெறும் வங்கிகளில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் கட்டாயம் பிடித்தம் செய்து பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்யப்படுவர். கடன் பெறா விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், பொது சேவை மையங்கள் மூலமாகவும், விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம்.

காரீப் பருவ பயிர்களை பயிரிடும் விவசாயிகள் இந்த திட்டத்தில் சேர நெல் மற்றும் எள் பயிருக்கு 31.07.2025, நிலக்கடலை பயிருக்கு 30.08.2025, துவரை பயிருக்கு 16.09.2025, சோளம், மக்காச்சோளம், பருத்தி பயிர்களுக்கு 30.09.2025, தோட்டக்கலைப்பயிர்களான வாழை பயிருக்கு 16.09.2025, கத்தரி, தக்காளி மற்றும் வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு01.09.2025, மரவள்ளி பயிருக்கு 16.09.2025 இறுதி தேதி ஆகும்.

பிரிமியத்தொகை (ஏக்கருக்கு) நெற்பயிருக்கு ரூ.760.76/ எள் பயிருக்கு ரூ.206.60/ நிலக்கடலை பயிருக்கு ரூ.576.99/ துவரை பயிருக்கு ரூ.335.92/ , சோளம் பயிருக்கு ரூ.290.13/ மக்காக்சோளம் பயிருக்கு ரூ.632.32/ மற்றும் பருத்தி பயிருக்கு ரூ.1199.84/ வாழை பயிருக்கு ரூ.4997.51/, கத்தரி பயிருக்கு ரூ.1110.88/ , வெங்காயம் பயிருக்கு ரூ.2267.51/, தக்காளி பயிருக்கு ரூ.1582.51/ , மரவள்ளி பயிருக்கு ரூ.1985/ வீதம் செலுத்த வேண்டும்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் போது முன்மொழிவு விண்ணப்பத்துடன் பதிவு கட்டணம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அடையாள அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து காப்பீட்டுத் தொகையை செலுத்திய பின்னர் அதற்கான ரசீதை பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டம் தொடர்பாக மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள அலுவலர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# கேரளாவில் பழுதாகி நிற்கும் பிரிட்டிஷ் போர் விமானம்: தனித்தனியாக பிரித்து கொண்டு செல்ல திட்டம்

திருவனந்தபுரம், ஜூலை.05-

கடந்த ஜூன் 14ம் தேதி திருவனந்தபுரம் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்ட பிரிட்டிஷ் கடற்படை போர் விமானமான எஃப் 35பி பழுதுபார்க்க முடியாத நிலையில் இருப்பதால், அந்த விமானத்தின் பாகங்களை தனித்தனியாக பிரித்து இங்கிலாந்துக்கு எடுத்து செல்ல திட்டமிடப் பட்டுள்ளது.

கடந்த ஜூன் 14ம் தேதி கேரளாவின் திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்ட பிரிட்டிஷ் ராயல் கடற்படையின் எஃப் 35பி ஸ்டெல்த் ஜெட் விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறுகளை சரி செய்யும் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. எனவே அந்த போர் விமானத்தை தனித்தனியாக பிரித்து, ராணுவ சரக்கு விமானம் மூலமாக இங்கிலாந்துக்கு மீண்டும் கொண்டு சென்று பழுது நீக்க திட்டமிடப்பட்டது.

இந்த போர் விமானத்தை பழுது நீக்குவதற்காக ஜூலை 2ம் தேதி இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளர்கள் குழு கேரளா வர திட்டமிடப்பட்டது, ஆனால் அவர்களின் வருகை ஒத்திவைக்கப்பட்டது. இதனையடுத்து நாளை (ஜூலை 5) 40 உறுப்பினர்களைக் கொண்ட இங்கிலாந்து பொறியாளர்கள் குழு சிறப்பு விமானம் மூலம் திருவனந்தபுரம் வரவுள்ளது.

எப்படி கொண்டுச் செல்லப்படும் இந்த போர் விமானம்? பழுது நீக்குவதற்காக பிரிக்கப்படும் எஃப்35பி போர்விமானத்தை கொண்டு செல்ல சி17 குளோப் மாஸ்டர் மிமிமி விமானம் பயன்ப டுத்தப்படுகிறது. குளோப்மாஸ்டர் என்பது இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இந்திய விமானப்படையால் பயன்படுத்தப்படும் ஆற்றல் வாய்ந்த கனரக சரக்கு விமானமாகும். இது சுமார் 77 டன் எடையை சுமக்கும் திறன் கொண்டது.

ஆனால், எஃப்35பி விமானம் 14 மீட்டர் நீளம் கொண்டது, அதன் இறக்கைகள் சுமார் 11 மீட்டர் நீளம் கொண்டவை. எனவே இந்த போர் விமானத்தை முழுமையாக குளோப்மாஸ்டரில் ஏற்ற முடியாது. இதனால் எஃப்35 பி விமானத்தின் இறக்கைகளை பிரித்து குளோப்மாஸ்டர் மூலமாக கொண்டுசெல்லவுள்ளனர். இதற்காக போர் விமானத்தை பிரித்து, பொருத்துவதில் நிபுணத்துவம் பெற்ற பொறியாளர் குழு திருவனந்தபுரம் வரவுள்ளது.



## திருநங்கைகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம்: மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா தலைமையில் நடைபெற்றது

புதுக்கோட்டை, ஜூலை.05-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், திருநங்கைகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.அருணா, தலைமையில் நடைபெற்றது.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநங்கைகளின் பொருளாதாரத்தினை முன்னேற்றிடும் வகையில் எண்ணற்ற நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் ஒவ்வொரு மாதமும் முதல் வெள்ளிக்கிழமையன்று திருநங்கைகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்று வருகிறது. மேலும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் திருநங்கைகளுக்கான சிறப்பு முகாம் நடத்துதல், பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றையதினம் திருநங்கைகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாம் நடைபெற்றது.

மேலும், 24.06.2025 அன்று நடைபெற்ற திருநங்கைகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் பெறப்பட்டிருந்த கோரிக்கை மனுக்களின்மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, இன்றையதினம் நடைபெற்ற முகாமில் 7 திருநங்கைகளுக்கு வருவாய்த்துறை சார்ந்த சான்றிதழ்களும், 3 திருநங்கைகளுக்கு மின்னணு அடையாள அட்டைகளும், ஒரு திருநங்கைக்கு மின்னணு குடும்ப அட்டையும், 3 திருநங்கைகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகளும் வழங்கப்பட்டது.

இந்த சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் 60 திருநங்கைகள் கலந்துகொண்டு தங்களுக்கான வீட்டுமனைப் பட்டா, சிறுதொழில் கடன், ஆதார் திருத்தம், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீடு அட்டை வழங்கிட வேண்டி பல்வேறு வகையான கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. மேலும் இம்மனுக்களின் மீது பரிசீலனை செய்து உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய நலத்திட்டங்களை திருநங் கைகள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு, தங்களது வாழ்க்கையினை உயர்த்திக்கொள்ள வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.கோ.ராஜராஜன் அவர்கள், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.மே. சியாமளா, மாவட்ட திட்ட அலுவலர் (முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம்) திரு.சுவாமிநாதன், இசேவை மாவட்ட மேலாளர் திரு.வடிவேல் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



■ புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மாங்குடி கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி காட்சி வாயிலாக திங்கள்நகர் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு புதிய கட்டிடத்தினை திறந்து வைத்ததைத்தொடர்ந்து

## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா குத்துவிளக்கேற்றி தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்



கன்னியாகுமரி, ஜூலை.05-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமை செயலகத்திலிருந்து கால்நடை பாரமரிப்பு துறை சார்பில் கன்னியாகுமரி மாவட்டம் திங்கள் நகர் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை நோய் புலனாய்வு பிரிவு கட்டிடத்தினை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் திரு.சுரேஷ் ராஜன் அவர்கள், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.ஜி.பிரின்ஸ் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் குத்துவிளக்கேற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து பேசுகையில்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் இன்று காணொலி காட்சி வாயிலாக நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.15 கோடி மதிப்பில் கால்நடை நோய் புலனாய்வு பிரிவு புதிய கட்டிடத்தினை திறந்து வைத்து சிறப்பித்தார்கள்.

நமது மாவட்டத்தில் உள்ள 49 கால்நடை மருந்தகங்கள், 2 கால்நடை மருத்துவமனைகள், 1 பன்முக கால்நடை மருத்துவமனை உள்ளன. புதிதாக திறக்கப்பட்டுள்ள கால்நடை நோய் புலனாய்வு பிரிவின் மூலம் அனைத்து நிலையங்களில் இருந்தும் பெறப்படும் சாணம், இரத்தம், பால் முதலிய மாதிரிகளை ஆய்வகத்தில் பரிசோதனை செய்து, நோய்கள் கண்டறிந்து, சிகிச்சை மேற்கொள்ளப்படும். மேலும் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் உள்ளிட்ட மத்திய மாநில அரசுகளின் அனைத்து தடுப்பூசி திட்டங்களையும் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்படும். மேலும் தடுப்பூசி பணிக்கு முன்னும் அதற்கு பின்னும் இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மத்திய ஆய்வகங்களுக்கு அனுப்பி வைத்து தகவல்களை சேகரிப்பதும், கால்நடை நோய் புலனாய்வு பிரிவின் முக்கிய பணியாகும்.

தொடர்ந்து பறவைக் காய்ச்சல் நோய் கண்டறிய கோழி பண்ணைகள் மற்றும் புறக்கடைகளில் வளர்க்கப்படும் கோழிகளில் இருந்து மாதிரிகள் எடுத்து பரிசோதனைக்கு அனுப்புதல், அண்டை மாநிலங்களில் பறவை காய்ச்சல் நோய் கிளர்ச்சி ஏற்படும்போது மாவட்ட எல்லைகளில் சோதனைச்சாவடி ஏற்படுத்தி நோயுற்ற கோழிகளின் போக்குவரத்தை தடுத்து நிறுத்தல், கால்நடைகளில் ஏற்படும் மலட்டுத்தன்மையை நீக்க பரிசோதனைகள் மேற்கொண்டு அதற்கான நோய் காரணியை கண்டறிதல் உள்ளிட்ட பணிகளை கால்நடை நோய் புலனாய்வு பிரிவு மேற்கொள்ளும். கால்நடை நோய் புலனாய்வு பிரிவு கட்டிடத்தினை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் கால்நடை விவசாயிகள் சார்பில் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் பேசினார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் மண்டல இணை இயக்குநர் கால்நடை பாரமரிப்புதுறை மரு.முகமது கான், துணை இயக்குநர் மரு.தங்கராஜ், உதவி இயக்குநர்கள் மரு.சுப்பிரமணியன் (நோய் புலானாய்வு பிரிவு), மரு.சந்திரசேகர், மரு.முகமது இஸ்மாயில், மரு.ராஜமோகன், கால்நடை உதவி மருத்துவர்கள் மரு.சஜயன், மரு.ஜெபா கிலாரி, மரு.ஜிமி கரோலின், திங்கள்நகர் பேரூராட்சி துணைத்தலைவர் திருமதி. சாந்தி, துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



## ஊட்டியில் தமிழகம் மாளிகை பூங்கா புல் மைதானம் சீரமைக்கும் பணி

ஊட்டி, ஜூலை.05-

ஊட்டியில் உள்ள தமிழகம் மாளிகை பூங்கா புல் மைதானம் சீரமைக்கும் பணிகள் துவக்கப்பட்டுள்ளது. ஊட்டி அருகே பிங்கர்போஸ்ட் பகுதியில் உள்ள தமிழகம் மாளிகை பூங்காவிற்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து கண்டு ரசித்து செல்கின்றனர். மேலும், தமிழ்நாடு முதல்வர் உட்பட அனைத்து அமைச்சர்களும் இங்குள்ள ஓய்வு மாளிகைக்கு வருகின்றனர். இதனால், இங்குள்ள பூங்கா அடிக்கடி பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், தோட்டக்கலைத்துறை கட்டுப்பாட்டில் உள்ள இப்பூங்காவை வழக்கம்போல், கோடை சீசன் மற்றும் இரண்டாவது சீசனுக்கு தயார் செய்வது வழக்கம்.

இந்நிலையில், இரண்டாம் சீசனுக்காக, பூங்காவை தயார் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாற்று நடவு பணிகளுக்காக பூங்காவை ஊழியர்கள் தயார் செய்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக தற்போது பூங்காவில் உள்ள பெரிய புல் மைதானம் சீரமைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ளது. மைதானத்தில் உரம் கலந்த மண் கொட்டப்பட்டு, சமன்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

## கனரா வங்கியின் 120ஆவது நிறுவன வார விழா மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது



தேனி, ஜூலை.05-

தேனி மாவட்டம், கருவேல்நாயக்கன்பட்டியில் உள்ள கனரா வங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் (RSETI- Rural Selfemployment Training Institue) கனரா வங்கியின் 120ஆவது நிறுவன வார விழா (03.07.2025) மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

கனரா வங்கியின் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் (RSETI) மூலம் செல்போன் பழுது நீக்குதல், வீட்டு உபயோகப்பொருட்கள் பழுது நீக்கம், பிளம்பிங், அலுமினியம் பேப்ரிக்கேஷன் வெல்டிங், காளான் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, மற்றும் வேளாண் உற்பத்தி உள்ளிட்ட பல்வேறு தொழிற் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

தேனி மாவட்டத்தில் விவசாயம் சார்ந்த தொழில் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளது. பயிற்சி முடித்து, புதிதாக தொழில் தொடங்கும் தொழில் முனைவோர்களுக்கு வங்கி கடனும் பெற்றுத்தரப்படும். இதனை இளைஞர்கள் பயன்படுத்தி தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டும்.

மேலும், தொழில் முனைவோர்களுக்கு மாவட்ட நிர்வாகம் மற்றும் அரசுத்துறைகளின் சார்பில் ஊக்குவிப்பும் ஆதரவும் அளிக்கப்படும்.

கிராமப்புற இளைஞர்களை தொழில்முனைவோர்களாக உருவாக்குவதற்கு இதுபோன்ற இலவச பயிற்சியினை அளிப்பதற்கு கனரா வங்கியின் RSETI நிறுவனத்திற்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, செல்போன் பழுதுநீக்குதல் மற்றும் காளான் வளர்ப்பு தொழில் பயிற்சிகள் முடித்த மாணவர்களுக்கு தேசிய தொழிற் பயிற்சி சான்றிதழ்களை (NCVET Certificates) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவன வளாகத்தில் நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மரக்கன்றுகளை நடவு செய்தார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில்

## ரூபாய் 10.57 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து, நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்

தூத்துக்குடி, ஜூலை.05-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து இந்து சமய அறநிலையத்துறை சார்பாக தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூபாய் 10.57 கோடி செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து, நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள்.

இந்து சமய அறநிலையத் துறையானது தனது நிர்வாகக் கட்டுப்பாட் டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயிலுக்கு சொந் தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது. மேலும், பக்தர்கள் அதிகளவில் வருகைதரும் திருக்கோயில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவினை ஏற்படுத்தி, பக்தர்களின் அனைத்து தேவைகளும் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கோவில்களுக்கும் வரலாறு மற்றும் கலாச்சாரத்துடன் கூடிய பாரம்பரியங்கள் உள்ளது. இந்த ஆன்மீக பாரம்பரியத்தை பாதுகாத்து மக்கள் சேவைகளை செய்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பக்தர்கள் அதிகளவில் வருகை தரும் திருக்கோயில்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ஒருங்கிணைந்த பெருந்திட்ட வரைவுகளை ஏற்படுத்தி பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில், அறுபடை வீடுகளில் இரண்டாம் படைவீடாக திகழும் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதி மற்றும் திருக்கோயில் நிதியின் மூலம் பெருந்திட்ட வரைவின்கீழ், 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வரிசை முறை, காத்திருப்பு அறை, மருத்துவ மையம், முடிக்காணிக்கை செலுத்தும் இடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, அன்னதானக்கூடம், பக்தர்கள் தங்கும் விடுதிகள், சுகாதார வளாகம், திருமண மண்டபங்கள், பணியாளர் குடியிருப்பு ஆகிய திருப்பணிகளின் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.09.2022 அன்று தொடங்கி வைத்தார். அத்திருப்பணிகளில் 33.25 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்ட முடி காணிக்கை மண்டபம், வரிசை வளாகம், சுகாதார வளாகங்கள், கலையரங்கம், நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் நீரேற்று நிலையம், ஆகியவை கடந்த 14.10.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன.



அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ரூ.10 கோடியே 57 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள 04 சொகுசு அறை (Suit Room), 24 குளிர்சாதன வசதிகளுடன் கூடிய அறைகள், 24 சாதாரண அறைகள் என மொத்தம் 52 அறைகளுடன் கூடிய பக்தர்கள் தங்கும் விடுதியினை பக்தர்களின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத் தொடர்ந்து, நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

மேலும், இன்றையதினம் பக்தர்களின் பயன்பாட்டிற்காக ரூ.10 கோடியே 57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் விடுதியினை திறந்து வைத்து, பக்தர்களின் தேவைகளை அறிந்து அதனை நிறைவேற்றி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்த லைவர் திரு.க.இளம்பகவத், இ.ஆ.ப., அவர்கள் துத்துக்குடி மாவட்ட மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலைத் துறை கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, இ.ஆ.ப., கூடுதல் ஆணையர் திரு. பொ. ஜெயராமன், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் தக்கார் திரு. ஆர். அருள்முருகன், இணை ஆணையர் திரு.ஞானசேகரன், திருச்செந்தூர் நகர்மன்றத் தலைவர் திருமதி சிவஆனந்தி, திருச்செந்தூர் வட்டாட்சியர் திரு.பாலசுந்தரம், திருக்கோயில் பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பக்தர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.



# பழனி முருகன் கோயிலில் நடிகை நயன்தாரா சாமி தரிசனம் ரோப்கார் மூலம் மலைக் கோயிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார்

பழனி, ஜூலை.05-

பழனி முருகன் கோயிலுக்கு திரைப்பட நடிகை நயன்தாரா, விக்னேஷ் சிவன் மற்றும் இரண்டு குழந்தைகளுடன் சாமி தரிசனம் செய்ய வருகை தந்தார். மலை அடிவாரத்தில் இருந்து ரோப்கார் மூலம் நயன்தாராவை மலைக் கோயிலுக்கு போலீஸார் அழைத்து வந்தனர். குழந்தைகளை மலைமீது இருந்த படியை தொட்டு வணங்க கூறிய பின்னர் விக்னேஷ் சிவன் அழைத்து சென்றனர். குழந்தை மலைக் கோயிலில் சிறப்பு தரிசன வழியில் சாமி தரிசனம் செய்ய நயன்தாராவை கோயில் ஊழியர்கள் அழைத்து சென்றனர். அதேபோல் சாமி தரிசனம் முடித்து பஞ்சாமிர்த பிரசாதம் வாங்கி நயன்தாரா தனது குழந்தைக்கு ஊட்டி விட்டார். சாமி தரிசனம் முடித்து கோயில் நிர்வாகம் சார்பில் நயன்தா ராவிற்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது. நயன்தா ராவை பார்ப்பதற்காக பக்தர்கள் பலரும் சூழ்ந்து கொண்டதால் மலைக்கோயில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. பொள்ளாச்சியில் மூக்குத்தி அம்மன் 2 படபிடிப்பில் நயன்தாரா கலந்துகொண்டுள்ளார்.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலம் பெருங்களத்தூர் வடக்கு பகுதி 51வது வட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அரசு ஆதிதிராவிடர் நல பள்ளியில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணியினை துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் 4வது மண்டல குழு தலைவரும், பெருங்களத்தூர் வடக்கு பகுதி செயலாளருமான அண்ணன் டி..காமராஜ், மாமன்ற உறுப்பினர் பா.லிங்கேஸ்வரி, வட்ட செயலாளர்கள் ஸ்ரீதர் பாபு, இ.கமலக்கண்ணன்*, பகுதி கழக நிர்வாகிகள், மாவட்டமாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கிளித்தான்பட்டரையில் உள்ள அங்கன்வாடி மையத்தை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது காட்பாடி வட்டாட்சியர் ஜெகதீஸ்வரன், மாமன்ற உறுப்பினர் சித்ரா, அரசுத்துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் காட்பாடி வடக்கு 5வது வட்ட பகுதி செயலாளர் (திமுக) விநாயகம், உட்பட பலர் உடனிருந்தார்.

# வேலூரில், சி.எம்.சி. மற்றும் மருத்துவமனை தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்




வேலூர், ஜூலை.05-

வேலூர் மாவட்டம், வேலூர் அண்ணா சாலை, அண்ணா கலை அரங்கம் அருகே, சி.எம்.சி. மற்றும் மருத்துவமனை தொழிலாளர்கள் சங்கம் சார்பில் ஐந்து அம்ச கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் சங்க தலைவர் இளங்கோவன், சங்க கௌரவ தலைவர் அருண்குமார், சங்க செயலாளர் சரவணன் வரவேற்புரையாற்றுகையில், சங்க பொருளாளர் ரஞ்சித்குமார், சங்க கௌரவ தலைவர் திலீபன் ஆகியோர் முன்னிலையிலும் இந்த மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

125 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த ஸ்டாப் டிபார்ட்மெண்ட் பணிகளுக்கான வயது வரம்பை திடீரென 30 ஆககுறைத்து, பணி ஆண்டுகளில் ஐந்து ஆண்டுகள் குறைத்துள்ளதை கண்டித்தும், இதனை தளர்த்தி தொழிலாளர்களின் மனைவி அல்லது கணவர் ஆகியோர்களையும் ஸ்டாப் டிபெண்டன்ட் ஆக கருத்தில் கொண்டு நிலுவையில் உள்ள அனைவருக்கும் சி.எம்.சி நிர்வாகத்தில் நிரந்தர பணிகளை தர வேண்டும் என்றும், 2026 ஜனவரியில் தரவேண்டிய சேலரி ரிவிஷனை உயர்ந்து வரும் விலைவாசி உயர்வை கருத்தில் கொண்டு அறுபது சதவீதம் ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டியும், அனைத்து விதமான நிரந்தரப் பணிகளில் உள்ள பணிகளை 80 சத வீதம் வேலூர் ராணிப்பேட்டை மற்றும் சித்தூர் மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்றும், சி எம் சி மருத்துவமனையினை சார்ந்த ராணிப்பேட்டை வளாகத்தில் கடைநிலை ஊழியர்கள் கண்காணிக்கப்படும் டிடிஎஸ் கால் ஆப் முறையை நீக்கப்பட வேண்டிய, சிஎம்சி மருத்துவமனை நிர்வாகம் சிஎம்சி மருத்துவமனை தொழிலாளர் தொழிற்சங்கத்தினை அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கமாக அறிவிக்க வேண்டும் என்றும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக விஜயலட்சுமி மூத்த செய்தியாளர் ஷேர் பர்சன் ஆப் ஐபிஎப், வேலூர் மாநகர தொழிற்சங்க கன்வீனர் ஞானசேகரன், வேலூர் திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் சி.ஐ.டி.யு. பரசுராமன், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை ஊழியர்கள் சங்கம் தலைவர் காசி, வேலூர் திருப்பத்தூர் சிஐடியு மாவட்ட தலைவர் முரளி ஆகியோர் ஆர்ப்பாட்ட சிறப்பு பேருரை ஆற்றி இந்த ஆர்ப்பாட்டத்தை சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியின் ஏற்பாட்டினை சங்க கவுரவ தலைவர் சுரேஷ்குமார், கிருஷ்ண மூர்த்தி கோகுலநாதன், சிவகுமார், கோடேஷ், சாமுவேல், ஜெயச்சந்திரன், பாலாஜி, மகேஸ்வரி ஆகியோர் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்ப்பாட்ட இறுதியில் சங்க துணை தலைவர் சந்துரு (எ) ஜார்ஜ் நன்றியுரையாற்றி இந்த ஆர்ப்பாட்டம் நிறைவுபெற்றது.





பெருங்களத்தூர் வடக்கு தெற்கு தாம்பரம் மேற்கு பகுதி சார்பில்

# பாகநிலை முகவர்கள் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் மூலம் உறுப்பினர் சேர்க்கைக்கான பயிற்சி கூட்டம்

தாம்பரம், ஜூலை.05-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெருங்களத்தூர் வடக்கு பகுதி, பெருங்களத்தூர் தெற்கு பகுதி, தாம்பரம் மேற்கு பகுதி, ஆகிய பகுதிகளில் உள்ள பாகநிலை முகவர்கள் (BLA2) பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) APP மூலம் உறுப்பினர் சேர்க்கைக்கான பயிற்சி கூட்டம் தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பரிதி.இளம்சுருதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, பகுதி கழக செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.சேகர், எஸ்.இந்திரன், தலைமை கழக பேச்சாளர்கள் கி.வேல்மணி, எஸ்.ஜி.கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் லயன் ஆர்.எஸ்.சங்கர், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் ஜே.சத்தியசீலன், தாம்பரம் தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் செ.முகுந்தன், பாகநிலை முகவர்கள் (BLA2) மற்றும் பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (BDA) அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்




# காட்பாடியில் பல்வேறு இடங்களில் நகர்ப்புற நலவாழ்வு மைய கட்டிடங்கள் திறப்பு விழா

வேலூர், ஜூலை.05-

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, கிளித்தான்பட்டரை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், (03.07.2025) மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு துறையின் சார்பில் வேலூர் மாவட்டத்தில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் தலா ரூ.120 இலட்சம் மதிப்பில் 2 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தலா ரூ.25 இலட்சம் மதிப்பில் 5 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி, குத்துவிளக்கேற்றி உள் கட்டமைப்புகளை பார்வையிட்டனர். இந்நிகழ்ச்சியில் வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த், காட்பாடி தாசில்தார் ஜெகநாதன், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் சுனில்குமார். 1 வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பரணிதரன், மாநகர நல அலுவலர் மரு.பிரதாப்குமார், மாமன்ற உறுப்பினர் சித்ரா மகேந்திரன், சுகாதார ஆய்வாளர்கள் சஞ்சய், சிவகுமார், காட்பாடி வடக்கு 5வது வட்ட பகுதி செயலாளர் (திமுக) விநாயகம், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# வேலூர் மாமன்ற கூட்டத்தில் போட்டோ படம் எடுக்க தடை






வேலூர், ஜூலை.05-

வேலூர் மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில் மாமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் மாமன்ற உறுப்பினர்கள் மக்கள் நலன் கருதி கேட்கப்பட்ட கேள்விகளை செய்தியாக வெளியிட போட்டோ வீடியோ எடுக்க தடை விதித்த மாநகராட்சி நிர்வாகம் புரட்சிமிகு வேலூரில், மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் சில மணித்துளிகளில் மின்னல் வேகத்தில் முடிந்த அவலநிலை!!

இதனை கண்டும் காணாத கண்மூடித்தனமாக உட்கார்ந்திருந்த மாநகராட்சி ஆணையர் ஆர்.லட்சுமணன்.

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி அலுவலகம், மாநகராட்சி அலுவலக கூட்ட அரங்கில் 60 வார்டுக்காண மாமன்ற கூட்டம், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் சுனில்குமார் தலைமையிலும், மாநகராட்சி கமிஷனர் ஆர். லட்சுமணன் முன்னிலையிலும் கூட்டமானது ஆரம்பித்து சில மணி துளிகளில் மின்னல் வேகத்தில் முடிந்துவிட்டன. இதற்கிடையே அதி விரைவு பிளைட் வேகத்தில் தீர்மானங்கள் குறித்து வார்டு வாரியாக வாசிக்கப்பட்ட நிலையில், வார்டில் உள்ள குறைகளை மக்கள் நலன் கருதி மாமன்ற உறுப்பினர்கள் கேட்கும் போது அதற்குரிய பதில் அளிக்காமல் மேயர் அராஜகமாகவும் தாறுமாறாகவும் பதில் அளித்தது இந்தக் கூட்டரங்கில் பரபரப்பு ஏற்பட்டது. இதனை ஊடகத்துறையினர் படம் மற்றும் ஒலிப்பதிவு செய்யும்போது அரசு விதிமுறைகளை மீறி, சட்ட விதிமுறைகளை பின்பற்றாமல் நீங்கள் போட்டோ வீடியோ எடுக்க கூடாது என ஆட்களை வைத்து அராஜகமாக தடுத்து படம் மற்றும் ஒளிப்பதிவு எடுக்க வேண்டாம் என தொடர்ச்சியாக செயல்பட்டு வருவதாக அதிருப்தியில் உள்ள மக்கள் பணியில் ஈடுபட்டு வரும் மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.



# தேரோட்ட விழாவிற்கு தேர் தயாராகும் பணி

தேவகோட்டை, ஜூலை.05-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை அருகே ராமாயண வரலாற்று சிறப்பும் இலக்கிய சான்றும் பெற்ற கண்டதேவி கிராமத்தில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானம் பாத்தியப்பட்ட ஸ்ரீ சொர்ணமூர்த்தீஸ்வரர் பெரியநாயகி திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலி ஆனி மாத தேரோட்டம் மிகச் சிறப்பாக நடைபெறும். உஞ்சனை, தென்னிலை, செம்பொன்மாரி, இரவுசேரி நான்கு நாட்டார்கள் மற்றும் கிராம பொதுமக்கள் இத் தேரோட்டத் திருவிழாவை மிக சிறப்பாக கொண்டாடுவார்கள்.

கடந்த ஆண்டு தேர் புதுப்பிக்கப்பட்டு வெள்ளோட்டமும் தேரோட்டமும் நடைபெற்றது. கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் தேரோட்ட விழா சிறப்பாக நடைபெற அறநிலை துறை அதிகாரிகள் தேரோட்ட பணிகளை செய்து வருகின்றனர். இந்த ஆண்டுக்கான இவ்விழாவிற்கு கொடியேற்றம், காப்பு கட்டுதல் நடைபெற்று ஒவ்வொரு நாளும் சுவாமி நான்கு ரத வீதிகளில் வலம் வரும் நிகழ்ச்சியும் நடைபெற்று வருகிறது.

தேர் திருவிழாவிற்காக தேர்தல் அலங்கரிக்கும் பணி மற்றும் ஹைட்ராலிக் பிரேக் சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. மாவட்ட கண்காணிப்பாளர் பொறுப்பு சந்தீஸ் தலைமையிலான காவல்துறையினர் கோவில் அருகே தற்காலிக காவல் நிலையம் அமைத்து 24 மணி நேரமும் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கண்டதேவி நுழைவு வாயிலில் நாலாபுரமும் காவல்துறையினர் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தியும் கண்டதேவி கிராமத்தை பாதுகாப்பு வளையத்துக்குள் வைத்துள்ளனர் மேலும் தேரோடும் நான்கு ரத வீதிகளிலும் இருபுறமும் பாரிக்காடுகள் அமைக்க ப்பட்டு வருகிறது. ஒன்பதாம் நாள் முக்கிய விழாவான தேர்த் திருவிழா 08.07.2025 அன்று காலை நடைபெறும்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161